2019 ஜூலை 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

10—

குடமுழுக்கு

***34025—திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவெறும்பூர் தொகுதி, 64–வது வார்டு, ரயிலடி ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் மற்றும் தங்களையும் வணங்கி எனது விடையை அளிப்பதற்கு முன்பாக, இந்த மாமன்றத்திற்கு ஓர் ஆன்மிகச் செய்தியை அளிக்க விழைகிறேன். காஞ்சிபுரம் அருள்மிகு தேவராஜ சுவாமி திருக்கோயிலில், ஸ்ரீ ஆதி அத்தி வரதர், அனந்த சரஸ்வதி அம்மன் திருக்குளத்தில், நீருக்கு அடியிலிருந்து 40 வருடங்களுக்குப் பிறகு வெளியே வந்து இன்றுமுதல் பக்தர்களுக்கு அருள்புரிந்து வருகிறார். இவ்விழா ஏற்கெனவே 1979 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலே, கழக ஆட்சியில் நடைபெற்றது. தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களது ஆட்சியிலே நடைபெற்று வருகிறது. இவ்விழா 1–7–2019 முதல் 17–8–2019 வரை நடைபெறவுள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அருளாசியுடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் நல்லாட்சியில் ஸ்ரீ அத்தி வரதரை தரிசித்து, ஸ்ரீ ஆதி அத்தி

வரதரின் ஆசி பெற அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவெறும்பூர் தொகுதி, ரயிலடி ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் திருக்கோயிலுக்கு திருப்பணிகள் செய்திட தொல்லியல் வல்லுநரின் கருத்துக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திருப்பணிக்கான மதிப்பீடுகளைத் தயார் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மதிப்பீடு அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர், திருப்பணி வேலைகள் தொடங்கி நிறைவு பெற்றவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான ஒப்புதலைப் பெற்று, இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு இந்த நிதியாண்டிற்குள் நடத்த நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி.

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய முத்தமிழ் அறிஞர் மற்றும் கழகத் தலைவர் அவர்களை வணங்கி, திருவெறும்பூர் தொகுதி, மாநகராட்சி வார்டு பகுதி 64–ல் இருக்கின்ற ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் திருக்கோயிலில் கிட்டத்தட்ட 1992 ஆம் ஆண்டிற்குப் பிறகு குடமுழுக்கு நடைபெறாமல் உள்ளது. அதற்கு ஏதேதோ காரணம் சொல்லி தள்ளிப் போட்டு வந்திருந்தாலும், கடந்த ஆண்டு இதற்கான கேள்வியை நான் கேட்டதற்குப்பிறகு 7–6–2018 அன்று இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக Archaeology Department–க்கு கடிதம் எழுதப்பட்டு குறைந்தது 2 மாதத்திற்குள்ளாக அதற்கான பதிலும் அனுப்பப்பட்டுள்ளது; அந்தக் கோயில் Archaeology Department–ன் control–ல் இல்லை, 100 வருடத்திற்குட்பட்டதுதான் என்று சொல்லி, உடனடியாக அதற்கான பணிகளை நீங்கள் செய்யலாம் என்று அந்தக் கடிதத்தில் எழுதியுள்ளார்கள். இது ஏதோ திருவெறும்பூர் பகுதியைச் சார்ந்த மக்கள் மட்டும் வணங்குகின்ற கடவுள் அல்ல. அந்தப் பகுதியிலிருந்து வெளியூருக்குச் செல்கின்ற பல பக்தர்கள் அனைவரும் நின்று வணங்கிவிட்டுச் செல்கின்ற கோயில் அந்தக் கோயில் ஆகும். ஆகவே, இந்த முறையாவது அந்தப் பணிகள் காலந்தாழ்த்தாமல் உடனடியாக நடைபெற உரிய நடவடிக்கையினை மாண்புமிகு

2019 ஜூலை 1]

அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீடுகள் தயார் செய்து, உரிய அங்கீகாரம் பெற்று, டெண்டர் பெறப்பட்டு இந்த ஆண்டே இந்தத் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இன்று வரப்போகின்றது என்று தெரிந்தவுடன், நான் அந்தக் கோயில் குருக்கள் அவர்களிடத்தில் பேசினேன். அவர்கள் எனது வீட்டிற்கு வந்தார்கள். அவர்களிடத்தில், 'நான் ஏதேனும் பேச வேண்டியது இருந்தால் சொல்லுங்கள். நான் மன்றத்தில் பேசுகிறேன்' என்று சொன்னேன். உடனடியாக அவர்கள் ஒரு பிரசாதத்தினைக் கொடுத்தார்கள். கேள்வி கேட்கின்ற உங்களுக்கும், நல்ல பதிலினைச் சொல்லப் போகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் இந்தப் பிரசாதம் போகட்டும். ஆஞ்சநேயர் அருள் உங்கள் இருவருக்கும் கிட்டட்டும் என்று சொல்லியிருக்கிறார். அது அவருடைய நம்பிக்கை மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தொகுதி மக்களின் நம்பிக்கையும்கூட என்று சொல்லி, இந்த முறை தவறாது நிறைவேற்றித்தர வேண்டும் என்று இந்த மன்றத்திலே கோரிக்கை வைத்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]